மாதர் போதினி

No. 251 நவம்பர் 1918 No. 11

MR. MOODY'S NOTES

மூடி துரையின் சூத்திரங்கள்

பின்வருகிற வியார்த்திகளை காலஞ்சென்ற மூடி துரை தமது வேதாகமத்தில் எழுதி வைத்திருக்கிறார் :—

மனந்திரும்புதல் என்பது நமது கருத்தும் வாஞ்சையும் மாறுகிற மாறுதலாம். மனந்திரும்பினவன் கடவுளைப்பற்றிய நூதன எண்ணமும் ஆசையுமுடையவனாயிருப்பான்.

குணப்படுதலாவது ஜீவியத்திலே உண்டாகிற ஒரு மாறுதலைக் குறிப்பிடும். கடவுளுக்காக ஜீவிக்கிற புதிய ஜீவியமே குணப்படுதலாம்.

மறுபிறப்பு என்பது சுபாவமாறுதலைக் காட்டும். கடவுளுக்கேற்ற புதிய இருதயமும் ஆசாபாசங்களுமே உடையவர்களாயிருப்பதாம்.

நீதிமானாக்கப்படல் என்பது மதிப்பிலே உண்டாகிற ஒரு மாறுதலைக் குறிப்பிடும். பாவியைக் கடவுள் பாவஞ்செய்யாதவனைப் போல் மதிப்பதே நீதிமானாக்கப்படுவதாம்.

புத்திரசுவிகாரம் என்பது ஓர் குடும்பமாறுதலைக் குறிப்பிடும். முன்னே கடவுளுக்குப் புறம்பே, அவருக்கு அன்னியராயிருந்தவர்களை அவர் தமது புத்திரராக ஏற்றுக்கொண்டு தமது குடும்பத்திற் சேர்த்துக்கொள்வதைக் காண்பிக்கும்.

பரிசுத்தமாக்கப்படுதல் என்பது ஊழியத்தின் மாறுதலைத் தெரிவிக்கும். உலகம், மாமிசம், பிசாசுக்கு ஊழியஞ்செய்வதை விட்டோய்ந்து தேவனுக்கென்றும் அவருடைய ஊழியத்துக்கென்றும் பிரித்தெடுக்கப்படுவதாம்.

மகிமைப்படுதல் என்பது இடமாறுதலைக் காண்பிக்கும். தேவ சமுகத்திலே பிழைத்து அவரோடு ஐக்கியமாயிருப்பதால் அவருடைய சாயலைப் பிரத்தியட்சமாய்த் தரித்துக்கொள்வதாம்.

SAVED TO SERVE

ஊழியஞ்செய்யவே இரட்சிக்கப்பட்டேன்

ஒரு தேசத்திலே கின்னரங்களைச் செய்கிற திறமைசாலியான ஆசாரி ஒருவன் இருந்தானாம். அவன் செய்கிற கின்னரங்களுக்கு ஈடானவைகளை உலகத்திலேயே கண்டுபிடிப்பதரிதாம். அவ்வளவு சிறந்த பலகைகளைத் தெரிந்தெடுத்து, கவலையோடே வேலைசெய்து, நேர்த்தியான வாத்தியக்கருவிகளைச் செய்து முடிப்பான். ஆயினும் அவன் செய்த கின்னரங்கள் யாவும் அவனுடைய அறையின் சுவர்களில் தொங்கிக்கொண்டு சாதாவாய்க் கிடக்குமேயல்லாது அவன் அவற்றிலொன்றையாவது விற்றதுமில்லை; தானே உபயோகப்படுத்தினதுமில்லை; விற்கப் பிரயாசப்பட்டதுமில்லையாம். அவற்றிற்குத் தக்க விலை கொடுக்கவும் தக்கபடி அவற்றைக் கையாடவுங் கூடியவர்கள் யார் இருக்கிறார் என்ற எண்ணத்தினால் அவைகளை மூலையிலே வைத்துக்கொண்டிருந்தானாம். இவனைப்போன்ற வீணலுவற்காரன் கிடையாது என்று சொல்லுவோமல்லவா?

கடவுளோ மனிதனை இரட்சிக்கும்போது இவனைப்போல் சும்மாவிருப்பதற்காக நம்மை உண்டுபண்ணாமல் அவருக்கு மகிமையாகப் பாடுகிறவர்களாகவும் சாட்சியிடுகிறவர்களாகவுமே நம்மை உண்டு பண்ணினார். இரட்சிப்பின் இராத்தல்களை அவர் ஒப்புக்கொடுக்கும் ஒவ்வொரு ஆத்துமாவையும் பார்த்து, 'இதைக்கொண்டு வியாபாரம்பண்ணு, வேறு இராத்தல்களை எனக்காக ஆதாயப்படுத்து' என்று கட்டளையிடுகிறார். இதை உணர்ந்து ஜீவிக்கிறவனெவனோ அவனே தன் இரட்சிப்பை முத்திரித்து நிச்சயப்படுத்துகிறான். அப்படிச் செய்யாதவன் தன் சொந்த இரட்சிப்பையும் இழந்துபோவான். இந்த ஊழியத்துக்கு ஒவ்வொரு ஆத்துமாவையும் எழுப்பிவிடுவதே படைமுயற்சி யென்னும் ஏற்பாட்டின் தாற்பரியமாம். இதை நமது சங்கத்தார் யாவரும் நன்குணர்ந்து ஜெபிப்பதிலும் வேதம் வாசிப்பதிலும் மாத்திரமல்ல, ஆத்தும ஆதாயம் செய்வதிலும் முயற்சியெடுத்து வருவார்களாக.

CARE OF CHILDREN

குழந்தைகளைப் பேணுதல்

ஒரு குழந்தை பிறந்தவுடனே ஒரு மனுஷன் உலகத்தில் பிறந்துவிட்டானென்று பெற்றோர் சந்தோஷிப்பது இயற்கை. ஆனால் அதைப் பேணிப் பாதுகாப்பது மிகவும் பாரமான கடமை: குழந்தைகளைச் சரியானபடி பேணி வளர்த்தால் அவர்கள் பெரியவர்களாகி, குடும்பத்திலும் தேசத்திலும் பேர் பெற்றவர்களாகலாம்; ஆனால் சரீரசுத்தம், சுசிகர ஆகாயம், ஏற்ற ஆகாரம், தகுந்த உடை முதலியவற்றைக் கவனித்து அவர்களைப் பேணி வளர்க்காவிடில், குழந்தைப் பிராயத்தில் மாண்டு, அல்லது பலட்சயப்பட்டு, உலகத்துக்கு ஒரு பிரயோஜனமுமற்றவர்களாய்ப் போவதும் கூடியகாரியம். ஜர்மன் தேசத்திலேயே ஜனனசங்கை உலகின்கண்ணுள்ள எல்லா தேசங்களிலும் அதிகமாம். அதற்குக் காரணம் அவர்கள் குழந்தைகளை வெகு ஜாக்கிரதையாய்ப் பரிபாலிப்பதாம். முதல் மூன்றுவருஷ யுத்தத்தில் 20 லக்ஷம் வாலிபர் அழிந்துபோனதால், குழந்தைகளின் க்ஷேமத்தைக் கவனித்து அவர்கள் சௌக்கியத்துக்கான ஏற்பாடுகளும், தாய்மாருக்கு சரியான ஆகாரமும் கொடுக்கும்படியாக அந்தக் கவர்ண்மெண்டார் ஏற்பாடு செய்திருக்கிறார்களாம்.

பிள்ளைகளை வளர்ப்பதில் முதல் இரண்டுவயசுக்காலமும் முக்கியமானது.

1. போஜனம். குழந்தை பிறந்த தக்ஷணமே அதற்குப் பால் கொடுக்கவேண்டுமென்று அநேக தாய்மார் நினைக்கிறார்கள். பிறந்து 36-மணி நேரம் வரை குழந்தைக்கு ஆகாரம் அவசியமில்லை. தாயினிடமிருக்கும் அற்ப சொற்பப் பாலே போதும். 36-மணி நேரத்துக்குப்பின் போதுமான பால் இல்லாததாகக் காணப்பட்டால், ஒருபங்கு பசுவின்பாலும், இரண்டுபங்கு கொதிக்கவைத்த தண்ணீரும், கொஞ்சம் சர்க்கரையும் கலந்து கொடுக்கலாம். குறைமாசத்தில் பிறந்த பிள்ளைகளுக்கு $1\frac{1}{2}$-மணி நேரத்துக்கோர்முறை ஆரம்ப முதல் இதைக் கொடுப்பது நலம்.

குழந்தைகளைப் போஷிப்பதில் கிரமமிருக்கவேண்டும். தாய்ப் பாலானாலும் பசுவின் பாலானாலும், இரண்டுமணி நேரத்துக்கோர் தடவைதான் கொடுக்கவேண்டும். படுக்கை ஈரமாகிவிட்டால், அல்லது வயிற்றுவலி முதலிய நோவினால், பிள்ளை அழுதாலன்றி மற்றப்படி குழந்தை அழும்போதெல்லாம் அதைத் தூக்கக்கூடாது. காரணமின்றி அழுகிற சமயங்களிலெல்லாம் தூக்கிக்கொண்டும்

வழக்கத்தை உண்டாக்காவிட்டால், படுக்கையில் அமைதியாய்ப் படுத்திருக்கும் அப்பியாசம் குழந்தைகளுக்குண்டாகும்.

குழந்தைக்குத் தாய்ப்பாலே எல்லாவற்றிலும் நல்லது. குழந்தை பிறக்குமுன்னதாகவே தாய் சரியான சாப்பாடு சாப்பிடுவது அவசியம். குழந்தை பிறந்தபின்னும் சாதாரண ஆகாரத்துடனே ஏதாவது பால் கஞ்சி செய்து சாப்பிடுவது உத்தமம். நீர்ப்பதார்த்தங்கள் சாப்பிடுவது பாலை அதிகரிக்கச் செய்யும், பால் அரைகுறையுள்ளவர்கள் லேக்டக்கோல் (Lactagol) என்னும் பருத்திவிதை பஸ்பம் அருந்துவது கைகண்ட பலனைக் கொடுக்கும்.

குழந்தை அழும்போதெல்லாம் பால் கொடுக்கக்கூடாது, முதலிலிருந்தே குறிக்கப்பட்ட மணிநேரத்தில் மட்டும் போஷித்தால் மணித்திட்டத்தின்படியே பிள்ளை விழித்துக்கொள்ளும். பிள்ளை மூன்றுமாசமாகும்வரை பகலில் இரண்டுமணிநேரத்துக் கோர்தடவையும், இரவில் இரண்டுதரமும் பால் கொடுத்தால் போதும். மூன்றுமாசத்துக்குப்பின் மூன்றுமணிநேரத்துக் கொருதடவையும், ஆறுமாசத்தில் நாலுமணிநேரத்துக் கோர்தடவையும் போஷித்தல் போதும்.

பத்து பன்னிரண்டு மாசமானவுடனே பிள்ளையைப் பால் மறக்கப் பண்ணவேண்டும். அச்சமயத்தில் தாயினிடம் அதிகப் பால் இருந்தாலும் பிள்ளைக்குச் சுகத்தையும் பெலத்தையும் கொடுக்கக்கூடிய சத்து அப்பால் இல்லை. சில சமயங்களில் பிள்ளைக்கு அதிகக் கெடுதியை உண்டாக்கினாலும் உண்டாக்கலாம். தாய்மாருக்கும் கெடுதியே. சிலவேளைகளில் இரண்டு மூன்று வயசுப்பிள்ளைகளுக்குப் பால் கொடுக்கிற தாய்மார் ஆஸ்பத்திரிக்கு வந்து குறுக்கு உளைச்சல், கைகால் உளைச்சல், பசியின்மை, பெலவீனம் முதலியவற்றால் கஷ்டப்படுவதாக முறையிடுகிறார்கள். தேவன் குறித்திருக்கும் காலத்திற்கு மேற்பட பிள்ளைகளுக்குப் பால் கொடுப்பதால் உண்டாகிற கஷ்டம் இது. மிருகங்களிடமிருந்து, நாம் இப்பாடத்தைக் கற்றுக்கொள்ளலாம். தங்கள் குட்டிகள் தாங்களே இரை தின்னத்தக்க காலம் வந்தவுடனே, அவைகளுக்குப் பால் கொடுக்காமல் உதைத்துத் தள்ளிவிடுகின்றன. இரண்டு அல்லது மூன்று வயசு வரையும் பால், ரொட்டி, கஞ்சி, அரைவேக்காடு முட்டை முதலியவைகளே பிள்ளைகளுக்கேற்ற ஆகாரம்.

கைப்பால் கொடுத்து வளர்க்கவேண்டிய பிள்ளைகளுக்குப் பசுவின்பால், எருமைப்பால், அல்லது வெள்ளாட்டுப்பால் கொடுக்கலாம். முதல் மூன்று மாசத்திற்கு ஒருபங்குப் பாலும் இரண்டுபங்கு கொதிக்கவைத்த தண்ணீரும் கொஞ்சம் சர்க்கரையும் சேர்த்துக்

கொள்ளலாம். பால் கொடுக்குமுன்னதாக, பாட்டில் அல்லது கோப்பையைச் சுத்தமான தண்ணீரால் நன்றாய்க் கழுவவேண்டும். ஏதாவது மீதி இருந்தால் அதைக் கொட்டிவிட வேண்டுமேயன்றி அடுத்தநேரத்திற்கென்று வைத்துவைக்கக்கூடாது. அந்தந்த நேரத்திற்குப் போதுமானதுமாத்திரம் அப்போதப்போது கலந்துகொள்ள வேண்டும். குழந்தைக்குப் பால் கொடுக்கும்படி உபயோகிக்கிற பாத்திரங்கள், கரண்டி முதலியவை, மகா சுத்தமாயிருக்கவேண்டும். அநேகம் குழந்தைகளுக்குக் கொடுக்கப்படுகிற பாலில் ஈ, தூசி முதலியவை விழாதபடி சுசியாய் வைக்கப்படாததினால் குழந்தைகள் வயிற்றோட்டம் முதலிய வியாதியினால் கஷ்டப்பட்டு மரணபாயத்திற் குள்ளாகிறார்கள். ஒரு குழந்தை ஒன்பது மாசமாகுமுன், அரிசாதம் முதலியவற்றை அதற்குக் கொடுக்கக்கூடாது. ஏழு, எட்டு மாசமுள்ள குழந்தைகளுக்குங்கூட சிலர் சாப்பாடு கொடுக்கிறதுண்டு. பல்லினால் அறைக்கவேண்டிய பதார்த்தங்களைப் பல்வருமுன் கொடுப்பதினால் அநேகம் பிள்ளைகள் பலட்சயமடைகிறார்கள், மரித்தும் போயிருக்கிறார்கள். பல்முளைக்க ஆரம்பித்தபின் சற்றுக் கடினமான பிஸ்கோத் துண்டை கடிக்கக் கொடுக்கலாம்.

ஒன்பது மாசமானபின் குழைந்த சாதம், பாலும் சர்க்கரையும் கலந்து கொடுக்கலாம். அல்லது அரிசிமா, சவ்வரிசி, சோளமா, கிழங்குமா முதலியவற்றைக் கஞ்சியாகச் செய்து பாலும் சர்க்கரையும் கலந்து கொடுக்கலாம். சாதாரணமாய்க் குழந்தைக்குத் தண்ணீர் குடிக்கக் கொடுக்கப் பயப்படுகிறவர்களுண்டு. கைக்குழந்தைகளாயிருக்கும்போதே கொதிக்க குளிர்ந்த தண்ணீர் சில தேக்கரண்டி யளவு கொடுப்பது நல்லது. வளர, வளர தாராளமாய்த் தண்ணீர் குடிக்கட்டும்.

2. **சரீர சுத்தி.** குழந்தை சிக்குச்சிரங்கு முதலிய புண்களின்றி சுகதேகியாய் இருக்கவேண்டுமானால் தினந்தோறும் வெந்நீரால் ஸ்நானம் செய்விக்கவேண்டும். வெந்நீர் நம்முடைய கை தாங்கும்படியான இளஞ்சூடாயிருந்தால் போதும். ஆந்திர தேசத்திலுள்ள அநேக தாய்மார் செய்கிறபடி பலமாய்க் குழந்தைகளைத் தேய்ப்பதும், மடமடவென்று வெந்நீரை ஊற்றுவதும் நன்றன்று. ஒரு பாத்திரத்தில் தண்ணீர் வைத்துக்கொண்டு, சோப்பு அல்லது ஏதாவது மா போட்டுத் தேய்த்து, உடம்பு முழுவதையும் கழுவி, ஒரு மெதுவான துணியினாலாவது ஒரு துவாலையினாலாவது துடைத்துவிட வேண்டும். ஸ்நானம் செய்விக்கும்போது, இரு கால்களுக்கிடையிலும், கழுத்திலும், காதுகளுக்குப் பின்னும், அக்குள், தொப்புள் முதலிய பாகங்களையும் விசேஷமாய்க் கழுவவேண்டும். குழந்தை

யின் • தலையை மூடிவைத்துக்கொண்டு உடம்பை மூடாமலிருப்பது நல்லதல்ல, குளிர்ந்த காற்று வீசும்போது நெஞ்சு, அடிவயிறு, கால்கள்தான் முக்கியமாய் மூடவேண்டிய பாகங்கள்.

3. அவுஷதம். பலர் சாதாரணமாய்க் குழந்தைக்குத் தினம் தோறும் விளக்கெண்ணெய் கொடுக்கிறார்கள். வயிற்றுச் சிக்கிருந்தால், அல்லது பச்சைநிறமாய் வயிறு கழிந்தால், அரை தேக்கரண்டி விளக்கெண்ணெய் கொடுக்கலாம். குழந்தையைக் குளிப்பாட்டினவுடன் உள்ளங்கை விளக்கெண்ணெய் அடிவயிற்றில் வலது பக்கத்திலிருந்து இடதுபக்கமாகத் தேய்ப்பது நல்லமுறை. அதிக வாந்தி அல்லது வயிற்றோட்டமிருந்தால், ஒரு வைத்தியரிடம் காண்பித்து மருந்து கொடுப்பது நல்லது. நாக்கு வெள்ளையாயிருந்தால் ஒரு சுத்த [illegible] வெந்நீரில் தோய்த்து நாக்கைத் துடைத்து, கொஞ்சம் தேனை நாவின்மேல் தடவவேண்டும். குழந்தை ஏதாவது நோவினால் அழும்போது, வயிற்று உப்பிசம் அல்லது கண் வலி இருந்தால் அடிவயிற்றிலாவது வேறெந்தப் பாகத்திலாவது சூடு போடக்கூடாது. வயிற்றுவலி இருந்தால் கொஞ்சம் விளக்கெண்ணெய் உள்ளுக்குக் கொடுத்து, விளக்கெண்ணெய் அல்லது உப்பு சுடவைத்து ஒத்தணம் கொடுத்தால் சீக்கிரம் சுகம் உண்டாகும். ஜன்னிக்குணம் இருந்தால் நெற்றி அல்லது கழுத்தில் சூடுபோடுவதற்குப் பதிலாக, குழந்தையின் உடம்பு முழுவதும் முழுகக்கூடிய ஒரு பாத்திரத்தில் கை பொறுக்கக்கூடிய வெந்நீரை விட்டு, குழந்தையைத் தண்ணீருக்குள் வைக்கவேண்டும். அப்படிப்பட்ட பாத்திரம் இல்லாவிடில் பிள்ளையின் தலையின் [illegible]மேல், ஜன்னி நின்று பிள்ளை அமைதியாகுமட்டும், வெந்நீரை ஊற்றிக்கொண்டே இருக்கவேண்டும். பின் அதை நன்றாய்த் துடைத்துவிட்டு துணியில் சுற்றி படுக்கையிலாவது தாயின் மடியிலாவது தூங்கவைக்கவேண்டும். அதை உட்காரவைக்கக்கூடாது. வைத்தியரிடம் கொண்டுபோய் மருந்து கொடுக்க விரும்பினால், ஜன்னி குணங்கள் நின்றபிறகு [illegible] கொண்டுபோகவேண்டும். குழந்தை பிறந்து சில வாரங்களுக்குள் அதற்கு மூக்கடைப்பு அல்லது மூக்கில் ஏதாவது சத்தம் கேட்டால், அல்லது [illegible]வது புண் இருந்தால், தகுந்த வைத்தியரிடம் காண்பிக்கவேண்டும். முக்கியமாய்க் கண்ணோவு இருந்தால் உடனே வைத்தியம் செய்வது நல்லது.

4. சுத்த ஆகாயம். சிறு குழந்தைக்குச் சுத்தமான காற்று அவசியம். குளிர்ந்தகாலமாயிருந்தால் அதின் உடம்பை நன்றாய் மூடிவைத்துக்கொண்டு திறந்த வெளியான ஆகாயமுள்ள இடத்தில் படுக்கவைக்கவேண்டும். உடம்பின்மேல் துணி உடுப்பும், தலைக்

குக் கனத்த கம்பளித் தொப்பியும் போடுவதைப்போல மோசமான பழக்கம் ஒன்றுமில்லை. மூடாவிட்டாலும் பரவாயில்லை. பிள்ளைக் குக் குளிர் தாவாது.

குழந்தைக்குப் பல் வருகிறகாலம் கஷ்டசமயம். அப்போது விசேஷித்த கவனத்துடன் குழந்தையைப் பார்க்கவேண்டும். அச் சமயத்தில் பிள்ளைக்கு ஆகாரம் இஷ்டமிராது, காய்ச்சலடிக்கும், வாயில் நுரைதள்ளும், தாகம் இருக்கும், ஆனால் பல் முளைத்த வுடனே இவையெல்லாம் பறந்துவிடும். குழந்தையைச் சரியான படி கவனித்தால் இவைகளினால் மோசம் நேரிடாது. குழந்தை அமைதியா யிராவிட்டால் இரவு படுக்கவைக்குமுன் வெந்நீரில் ஸ்நானம் செய்வித்தால் நன்றாய் அயர்ந்து தூங்கும். இரவும் பக லும் சுத்த ஆகாயம் அவசியம். அடிக்கடி கொதிக்கவைத்த குளிர்ந்த ஜலம் குடிக்கக் கொடுக்கவேண்டும். தந்தம் அல்லது எலும்பினால் செய்யப்பட்ட ஒரு வஸ்துவைக் கடிக்கக் கொடுக்கலாம். வயிற் றோட்டம் அதிகமாயிருந்தாலன்றி அதைத் தடுக்கக்கூடாது. லேசா ய்ப் பல் வருவதற்கு அது உதவியே. ஆரோரூட் மாக்கஞ்சி குடிக் கக் கொடுக்கலாம்.

மேலே சொல்லப்பட்ட விதிகளைத் தாய்மார் கவனித்தால் தங் கள் பிள்ளைகள் சுகதேகிகளாய் வளருகிறதைக் கண்டு சந்தோஷிப் பார்கள்.

Dr. M. Longmire.

NOTES ON GARDENING

விவசாயக் குறிப்புகள்

The Plantain Tree

வாழை

இது எங்கும் உண்டாகக்கூடிய அதிக பிரயோஜனமான செடி.

வாழை வகை. வயல்வாழை, கதலி, தேன்கதலி, மொந்தன், கோயம்புத்தூர் மொந்தன், பூவில்லாச்சுண்டன், செவ்வாழை, பச்ச நாடான்வாழை, சாம்பல்வாழை, சிறுமலைவாழை, கொட்டைவாழை, மோரீஸ்வாழை, பூவன்வாழை, ரஸ்தாளிவாழை எனப் பலவகை யுண்டு.

பயிரிடும் விதம். ஆற்றுப்படுகையில் வண்டல் தரையும் பொறுக்கு மண் தரையும் பயிர்களுக்கேற்றது. இப்படிப்பட்ட ,நல்ல நிலத்தை சமமாக்கி ஏக்கருக்கு 50 வண்டிக்கு குறையாமல் மாட்டின் சாணமாவது, பொறுக்கு மண்ணாவது போட்டு குறைந்தபக்ஷம் ஐந்து உழவாவது உழுது புழுதியாக்கி கூடுமானல் மாட்டுக்கிடை வைத்து அதில் பூமியை பல பாகமாகப் பிரித்து தண்ணீர் பாய்வதற்கு ஏற்றதாக அகலமான நீள வாய்க்கால் பிடித்து அதே வாய்க்காலில் எட்டு அடிக்கு ஒவ்வொரு குழியும் மூன்றடி அகலம் இரண்டடி ஆழம் இருக்கும்படி வெட்டி அதில் பொறுக்குமண், மாட்டின் சாணமும் பலதும் சேர்ந்து உண்டாகிற எருவும் கலந்துபோட்டு கன்றுகளை வரிசையாக நட்டு நாலுநாளைக்கோர்தரம் தண்ணீர் பாய்ச்சவேண்டும். கன்றுகள் இலைவிட்டு சமார் இரண்டு மாதத்திற்குப்பின் கன்றைச் சுற்றி கொத்திக்கொடுக்கவேண்டும். நாலுமாதம் ஆனபின் கொத்திக்கொடுத்து, வாழைத்தூரில் சாதாரணமாய்க கிடைக்கக்கூடிய எரு கொஞ்சம் வைத்து, பக்கத்து நிலத்தை வாய்க்காலாக வெட்டி,

வெட்டின மண்ணை எருப்போட்ட வாழைத்தூரில் உயரமாகப் போடவேண்டும். கண்வைத்து எழுமாதம் ஆனபின் முன் வாழையைச்சுற்றி குவியலாகப்போட்ட மண்ணைப் பிரித்து மறுபடியும் வேண்டியமட்டும் சாணி உரமாவது, கொளிஞ்சியாவது தூரில் வைத்து மறுபடியும் மண் அணைக்கவேண்டும். வாழைக்கு கொளிஞ்சி நேர்த்தியான உரமென்று அனுபோகத்தால் அறிந்திருக்கிறோம். வாழையிலிருந்து காய்ந்துபோகிற மட்டையையும் வெட்டிப்போடுகிற கண்ணையும், குலை வெட்டினபின் மரத்தண்டையும் தூரில் வைத்து மண் அணைத்தால் நேர்த்தியான உரமாகும். மரம் காய் போட ஆரம்பித்தவுடன் தூரில் பச்சைச் சாணியை கரைத்துவிடுதல் நல்லது. சாதாரணமாய் கொல்லைத் தோட்டத்திலாவது சிங்காரத் தோப்புகளிலாவது வாழைபோட்டால் பத்து அடிக்கு ஒன்று வீதம் மூன்று அடி அகலம் இரண்டு அடி ஆழம் வெட்டி பொறுக்குமண் அல்லது ஆற்று வண்டல் மண்ணும், எருவும், குழிப்பக்கத்தில் இருக்கிற மேல் மண்ணும் கலந்து குழிக்குள்போட்டு கண் நடலாம். கண் எடுத்து எட்டுநாள் ஆனபோதிலும் நடலாம். பொதுப்பட கண்ணை வாடவைத்து நடுதல் நல்லது. பொறுக்குமண் என்பது பல இடங்களிலுமிருந்து மழைத் தண்ணீரினால் குளங்களுக்கு கொண்டுவரப்படுகிற உரமே. குளத்தில் தண்ணீர் வற்றினபின் காய்ந்தவுடன் பார்த்தால் பூமிக்கும் அதற்கும் சம்பந்தமில்லாமல் கபாலமாய் மேலே வெடித்திருக்கும்; அதைக்கூட்டிச் சேர்த்துக் கையில் எடுத்தால் லேசாயிருக்கும்; இவ்வித உரமே வண்டல் என்பது.

பயிரிடுங்காலம். தை மாசம் ஏற்றகாலம். மற்றகாலத்தில் போட்டால் வெயிலுக்கும் காற்றுக்கும் அகப்பட்டு நஷ்டமடையும். பூ வெளிக்கு வருகிற சமயம் வெயில்காலமாயிருந்தால் அதிக வெயிலினாலும் தண்ணீர் கஷ்டத்தினாலும் மேல்மழை இல்லாததினால் வாடி, தண்டு சுருங்கி, குலைகள் சிறுத்துப்போகும். காய் உண்டாகி முற்றுகிற சமயம் காற்றுக்காலமாய் இருந்தால் குலைகள் சாய்ந்து நஷ்டமடையும். வாழைக்கு சுமார் வயது 15 மாசமென்று சொல்லலாம். நல்ல அனுபோகமுள்ளவர்கள் எப்படியாவது இரண்டு மாசத்துக்குட்பட்ட கண்ணை நடுவார்கள். நட்ட நாளையிலிருந்து எட்டாவது மாசம் பக்கத்துக்கண் உண்டாகும். நட்ட பத்தாவது மாசம் முடிய பூ வெளிக்கு வரும். அதிலிருந்து மூன்றுமாசம் சென்றபின் பழத்துக்கு உதவும். எப்போதும் வாழைக்கண் இளமையாக இருக்கும்போது நடுவது நல்லது. நல்ல பலன் கிடைக்கும். அதிக நாளான கண்ணை நட்டால் பத்துமாசத்திலல்ல, ஆறு அல்லது எட்டு மாசத்தில் பூ வெளிக்குவரும். சொற்ப தகையுள்ள சிறியகுலை

போகும். ஆகையால் தைமாசத்திற் கண் நட்டால் பங்குனி, சித்திரையாகிய வெயில்காலத்தில் சிறிய மரமாயிருப்பதினால் கெட்டுப் போகாது. வைகாசி மாசத்தில் எப்படியும் மழைபெய்யும், அல்லது ஆறுகளில் தண்ணீர் வரும். எப்போதும் வாழைக்கு வைகாசியில் மழைபெய்தால் நல்லது. மரம் சீக்கிரம் உற்பத்தியாகும். ஆடிமாசத்தில் குலைகள் வெளிக்குவராத காலமானதால் ஆடிக்காற்றில் சாய்ந்து நஷ்டமடையாது. ஐப்பசிமீ மழைகாலமானபடியினாலும் வாழையில் பூ வெளிக்குவருகிற பத்தாவது மாசமாயிருப்பதினாலும், தண்ணீர் குறைவில்லாததினாலும், மேல்மழையினால் மரம் செழிப்பாகி அதிகத் தொகையுள்ள பருமனான காய்கள் உண்டாகும். உரத்தினால்தான் பலன் என்று நினைத்துவிடக்கூடாது. அதிக உரம்போட்டு தண்ணீர் இல்லாமல்போனால் வெப்பத்தினால் கெட்டுப்போகும். குலை போடுகிற சமயம் மழையில்லாமல் கிணற்றிலிருந்து எவ்வளவு தண்ணீர் இறைத்தபோதிலும் பலன் குறைவுதான். உதாரணமாக நெல் கதிர்வாங்குகிற சமயம் மழையிருந்தால் ஒன்றுபோல் கதிர் வெளிக்குவந்து சேதமில்லாமல் அறுப்பாகும். எவ்வளவு தண்ணீர் இருந்தாலும் மழையில்லாவிட்டால் கதிர் முன் பின் வெளிக்கு வந்து குறித்தநாளில் அறுப்பாகாமல் காய்ந்ததாகவும் பச்சையாகவும் இருக்கும். ஆகையால் வாழைக்கண் நடுவதற்கு ஏற்றகாலம் தை மாசம்தான்.

இலைவெட்டு. 'இலைதின்று காயறியான்' என்று பழமொழி உண்டு. இலையினால் லாபமிருந்தபோதிலும் புதிதாக நட்ட வாழையில் நட்ட நாளிலிருந்து காய் உண்டாகும்மட்டும் வாழை இலையை அறுக்கக்கூடாது. அந்த வாழையிலிருந்து மறு பலனுக்கு வருகிற முதல் கண்ணிலிருந்தும் இலை அறுக்கக்கூடாது. இலை வேண்டுமானால் பக்கத்தில் உண்டாகிற மற்றக் கண்களிலிருந்து அறுத்துக் கொள்ளலாம். ஏக்கர் கணக்காய் வாழைபோட்டு விற்பனை செய்கிறவர்களும் வாழையின் தலைப்பிள்ளையிலிருந்து இலை அறுக்காமல் மற்றக் கண்களிலிருந்து அறுத்து விற்பனைசெய்யலாம். பொதுப்பட பக்கத்து கண்ணிலிருந்து இலையை அறுத்து கண்ணை வெட்டிவிடுவது நல்லது. ஏனென்றால் அது சாப்பிடுகிற உரம் தாய்க்கும் தலைப்பிள்ளைக்கும் பிரயோஜனமாயிருக்கும். ஆனால் கண்ணை மேலே வெட்டிவிட்டாலும் அதிலிருந்து திரும்ப துளிர் உண்டாகும். ஆகையால் அதை மேலே வெட்டுவதால் அதின் உரம் தாய்க்கு பிரயோஜனமாயிருக்குமென்று நினைத்துவிடக்கூடாது. ஆனால் வேண்டியமட்டும் உரம்போடவேண்டும். ஆகையால் கொல்லைத் தோட்டங்களிலும் சிங்காரத் தோப்புகளிலும் வாழை

போடு... பவர்கள் வாழைக்கன்றை வெட்டிவிடாமல் அதிக உரம் போட்டு தண்ணீர்விட்டு இலையை பிரயோஜனப்படுத்திக்கொள்ள லாம். ஒரு வாழைகுலை போட்டு பலன் எடுத்தபின் அந்த வாழையை வெட்டிவிடுவதுடன் அதிலிருந்து உண்டான தலைப்பிள்ளையைத் தவிர மற்றக்கண்களை வேரோடுவெட்டி எடுத்துவிட்டு தலைப்பிள்ளை யையும் அதிலிருந்து உண்டாகிற கண்களையும் அதாவது பேரப் பிள்ளைகளையும் வைத்து காப்பாற்றினல் நல்ல பலன் கிடைக்கும். பொதுப்பட வாழைக்கு நோய் கிடையாது. ஆனல் தண்ணீர் குறைவினல் நஷ்டமடையும். பொதுப்பட கவனிக்கவேண்டியது, வாழைக்கண் நட்ட நாளிலிருந்து பலன் உண்டாகும் வரைக்கும் ஆறுதடவை கொத்திக்கொடுத்து நூறுதடவை தண்ணீரும் பாய்ச்ச வேண்டும். இப்படிச் செய்தால் குலை ஒன்றுக்கு 12-க்கு மேற்பட்ட சீப்பும், 240 காய்க்குக் குறையாமலும் கிடைக்கும். அதிகமாய் விருத்திசெய்கிற திருநெல்வேலி, தஞ்சாவூர் முதலிய இடங்களில் துட்டுக்கு (4 பைசா) எட்டு பழம் வீதம் வாங்கலாம். அதிக விருத்தியில்லாத பட்டணங்களில் அணுவுக்கு எட்டாவது கிடைக் கும். விவசாயத்தின்மேல் அதிக முயற்சியில்லாத நிஜாம் ராஜ்யத் தில் டசன் பழம் அணு நாலு.

G. Joseph.

AN ADDRESS BY SADHU SUNDAR SINGH

சாது சுந்தர்சிங் செய்த ஓர் பிரசங்கம்

2 யோவான் 5, 6. 'இப்பொழுதும் அம்மாளே, நாம் ஒருவரிலொருவர் அன்புகூரவேண்டுமென்று, உமக்குப் புதிய கற்பனையாக எழுதாமல், ஆதிமுதல் நமக்கு உண்டாயிருக்கிற கற்பனையாக எழுதி, உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன்.

'நாம் அவருடைய கற்பனைகளின்படி நடப்பதே அன்பு; நீங்கள் ஆதிமுதல் கேட்டிருக்கிறபடி நடந்துகொள்ளவேண்டிய கற்பனை இதுவே.'

இவ்வாக்கியத்தை யோவான் பொதுவாக எல்லாருக்கும் எழுதி ஞலும் விசேஷமாய் பெண்களுக்கே எழுதுகிறர். இதைப் பரிசுத்த யோவான் தமது சகோதரிக்கு எழுதுகிறர். ஆகையால் பெண்க ளாகிய நம்மெல்லாருக்கும் எழுதுகிறர். விசேஷமாய் தேவனில் அன்புகூருகிறவர்களுக்கே. கிறிஸ்தவர்களாகிய நாம் கிறிஸ்து வைச் சிறுவயதிலேயே அறிந்திருந்தும் அவரை அலக்ஷியம் செய் கிறோம். ஆனல் மகமதியர், இந்துக்கள் முதலியவர்களில் சிலர் இவ்விஷயங்களில் நம்மை முந்திக்கொள்ளுகிறர்கள். நீபேத்து

தேசத்தில் ஓர் பணக்காரப்பெண் வெயில் நேரத்தில் தனிமையாகப் போய்க்கொண்டிருப்பதை நான் பார்த்து, 'எங்கே அம்மா போகிறாய்? காலில் உதிரம் தோன்றுகிறதே' என்றேன். அதற்கு அவள், 'எங்கள் வீட்டில் சமாதானமில்லையாகையால் அந்த கோவிலுக்குப் போய சமாதானம் அடையலாமென்று போகிறேன்' என்றாள். அப்பொழுது நான், 'அந்தக் கோவில் கல்தானே, அங்கு போய் என்ன செய்யப் போகிறாய்?' என்று கேட்டேன். அதற்கு அம்மாது, 'எனக்கு அங்கே சந்தோஷம் கிடைக்காவிட்டால் அருகிலிருக்கும் கங்கையிலாவது விழுந்து சாவேன்' என்றாள். பின்பு நான் அவளை ஓர் மிஷனரி அம்மாளிடம் கொண்டுபோய்ச் சேர்த்தேன். கூடிய சீக்கிரத்தில் அவள் கிறிஸ்தவளாகி அநேகரைக் கிறிஸ்துவினிடம் திருப்பினாள். ஓர் இந்து இப்படி செய்தால், கிறிஸ்தவர்களாகிய நாம் ஏன் இப்படி செய்யக்கூடாது?

கிறிஸ்து, 'முந்தினோர் அநேகர் பிந்தினோரும், பிந்தினோர் அநேகர் முந்தினோராயும் இருப்பார்கள்' என்று சொன்னாரே. அப்படியே, கிறிஸ்தவர்களாயிருக்கிற நம்மை, மகமதியரும் இந்துக்களும் முந்திக்கொள்ளாதபடி, காலத்தை நாம் இப்பொழுதே ஆதாயப்படுத்திக்கொள்ளவேண்டும். இந்துக்கள் எவ்வளவோ நேரம் ஜெபிக்கிறார்கள். நாமோ 10 நிமிஷம் ஜெபிக்குமுன் சோர்ந்துபோகிறோம். ஜெபம் செய்ய செய்யத்தான் பாவத்தை வெறுப்பதற்கு நமக்கு ஆசை வரும்.

பதினொன்று வயதுள்ள ஓர் பெண் இருந்தாள். அவள் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதை அவளுடைய பெற்றோர் அறிந்து அவளைத் தடுக்க விரும்பினார்கள். அவள் இணங்காததை அவர்கள் கண்டபோது இரும்பைக் காய்ச்சி அவளுக்குச் சூடுபோட்டார்களாம். அப்பொழுது அவள், 'நான் கிறிஸ்துவுக்காக அப்பம்போல் சுடப்படுகிறேன். அப்பத்தைத் திருப்பிப்போடுவதுபோல என்னை மறுபக்கத்திலும் சுடுங்கள்' என்று சொல்லி மரித்துப்போனாள்.

ஒருநாள் நான் பசியினால் வருந்தி வேர்வையோடு போய்க்கொண்டிருக்கும்பொழுது சாத்தான் வந்து, 'உனக்கு ஏன் பசி? உன் வீட்டிற்குப் போய் சந்தோஷமாய் இரு' என்றான். அதினால் நான் வருத்தப்பட்டு அழுதுகொண்டிருந்தேன். அத்தருணத்தில் ஒருவர் வந்து, 'நீ கிறிஸ்துவுக்கென்று ஊழியம் செய்யத் தொடங்கினவுடன் பின்வாங்கக்கூடாது' என்று ஜெபம் செய்தார். அதினால் நான் ஆறுதலடைந்து விழித்துப்பார்க்கும்பொழுது ஒருவரையும் காணவில்லை. அது கிறிஸ்துதான் என்று அறிந்தேன். கர்த்தருக்கு மிகவும் ஸ்தோத்திரம் செலுத்தினேன்.

மற்றொரு தடவை நான் $1\frac{1}{2}$ நாள் சாப்பிடாமல் பட்டினியாய் இருந்து ஓர் மரத்தைக் கண்டு அதன் இலைகளையாவது சாப்பிடலா மென்று சாப்பிட்டபொழுது, அது நான் வீட்டில் சாப்பிட்ட ஆகாரத்தைவிட இனிமையாயிருந்தது. இப்பேர்ப்பட்ட சந்தோஷம் தேவனைப் பற்றிக்கொண்டால்தான் வரும். ஓர் ஊரில் ஒரு குடித் தனம் இருந்தது. அவர்களுக்கு ஒரே பிள்ளை. ஒருநாள் தாயான வள் தகப்பனை நோக்கி, 'குழந்தையைப் பார்த்துக்கொள், இன்று ஞாயிற்றுக்கிழமையாகையால் நான் கோவிலுக்குப் போகிறேன்' என்று சொல்லிப் போய்விட்டாள். சிறிது நேரத்திற்கெல்லாம் குழந்தை தகப்பனிடம் வந்து, 'நான் அம்மாளிடம் போகவேண்டும்' என்றது. அவரோ பிள்ளை போகாது என்று நினைத்து, 'போ' என்று சொன்னார். ஆனால் பிள்ளை உண்மையாகவே அவ்வழி வந்து ஆற்றில் மரணமடையும் தருணத்திலிருந்தது. அத்தருணத்தில் ஒருவர் வந்து அப்பிள்ளையைத் தப்புவித்து தாயினிடம் சேர்த்தார். தாய் பிள்ளையைப் பார்த்து, 'யார் உன்னைக் கொண்டுவந்தது?' என்று கேட்டபொழுது, அது, 'சுவாமி' என்றது. நாம் அவருக்குப் பிரிய பிள்ளைகளாய் நடப்பது அவசியம். நாம் இயேசுகிறிஸ்துவின்மேல் அன்புகூரவேண்டும். நாம் உலகப்பிரகாரமான அழகை நாடுவோ மானால் ஓர்காலத்தில் அது கெட்டு அழிந்துபோகும். ஆகையால் தேவதூதர்களோடு சந்தோஷித்திருக்கும் நாளுக்காக நாம் நம்மை ஆயத்தஞ் செய்துகொண்டிருக்கவேண்டும். இதுவே நமக்குத் தகுந்த காலம். நாம் நம்மைச் சுத்திசெய்துகொள்ள வேண்டும்.

முன்கூறிய பதினன்கு வயது பிள்ளை உன்னை உயிர்த்தெழுத லில் சந்தித்து 'நான் பதினன்கு வயதில் மோக்ஷத்தைப் பிர[illegible] கெட்டுப் கொண்டேனே. உனக்கு இத்தனை வயதாகி[illegible] போனாய்?' என்றால் உனக்கு வெ[illegible]யராதா? உன் இருதயத்தை இத்தருணமே திறந்[illegible]. 2 யோவானில் கூறியிருக்கும் பிரகாரம் கிறிஸ்துவிலும் ஒருவர்க்கொருவரிலும் நாம் அன்புகூரவேண்டும்.

நாம் பிரதிதினமும் செய்யவேண்டிய பிரார்த்தனை என்னவென் றால், 'தெய்வமே, எங்களுக்கு இந்த வயதிலேயே பரிசுத்த ஆவி யை எங்கள் இருதயத்தில் பொழிந்தருளும். எங்களை உமக்குத் தத்தம் செய்ய கிருபைசெய்யும், பிதாவே—ஆமென்' என்பதே.

Miss N. Devasigamani, B.A., L.T.

A CURE TO GARDEN PESTS

செடிகளை நாசம்பண்ணும் சில சாதாரண பூச்சிகளைக் கொல்வதற்கு எளிதில் வீட்டில் செய்யக்கூடிய ஔஷதங்கள்

சென்னை ராஜதானியில் பற்பல விடங்களிலிருந்து, காய்கறி தோட்டங்களிலும் பூ, பழவகை தோட்டங்களிலும் சேதத்தை உண்டு பண்ணும் சாதாரண பூச்சிகளைப் போக்கடிக்கும் பரிகார முறைகளைத் தெரிவிக்கும்படி அடிக்கடி எனக்கு கடிதங்கள் வருவதுண்டு.

ஆகையால், பின்வரும் சில முறைகள் இப்பேர்ப்பட்ட தொந்தரவு செய்கின்ற பூச்சிகளை அப்புறப்படுத்துவதற்கு கொஞ்சம் ஏதுவாயிருக்குமென்பதற்கு ஐயமில்லை.

தொந்தரவு செய்யக்கூடிய பூச்சிகளில் சாதாரணமானவைகள் பின்வருவன:—

(1) செடிப்பேன் அல்லது அசவுணி.—இவை இயற்கையாய் எல்லாவித மரம், செடிகளிலும் இருப்பவை. சாதாரணமாய் செடியினது துளிர்களிலும், கொம்புகளிலும், கொழுந்து இலைகளிலும், மொக்கு, பூ முதலானவற்றிலும் கூட்டம் கூட்டமாய்க் காணலாம். அவைகள் உறுஞ்சும் பூச்சிகள். ஆனதினாலே மிருதுவான இடங்களிலிருந்து செடியின் சாரத்தை உறுஞ்சுகிறது. ஒரு செடியில் அதிகமாய் இப்பூச்சிகள் காணும்பொழுது இலைத் துளிர்களும், மொக்குகளும் அதிக நஷ்டத்தை யடைகின்றது. இலைகளும் சுங்கி, துளிர்விடுவதும் நின்று; பூச்சியினால் பீடிக்கப்பட்ட பாகங்கள் கொஞ்சம் கொஞ்சமாகக் காய்ந்து, கடைசியில் செடியே பட்டுப்போகின்றது.

சற்றுநேரம் இந்தச் செடிப்பேனை உற்று பார்ப்போமாகில், அதற்கு 6 கால்களும், 2 மீசைகளும், தலையின் அடிப்பாகத்தில் ஊசி போன்ற ஒரு ஆயுதத்தையும் காணலாம். இதைத்தவிர அதன் உடலின் பின்பாகத்தில் ஒவ்வொரு பாகத்திலும் ஊசிபோன்ற சிறு குழாய்களுண்டு. இவைகளுக்கு தேன் துவாரங்கள் என்று பெயர். பூச்சியானது இத்துவாரங்களினின்று தேன்போன்ற மதுரமான சாற்றை வெளியாக்குகிறது. இதுகாரணத்தால் எறும்புகள் அவ்விடங்களை அதிகமாய் நாடிவரும். எறும்புகள், விளையும் பயிர்களுக்கு கெடுதி விளைவிப்பது மிக்க அபூர்வம். எறும்புகள் அதிகமாய் செடிகளின்பேரில் காணப்படும்போது அவைகள் செடிப்பேன் அல்லது அசவுணியைத் தேடித்திரிகிறதென்று நிதானிக்கலாம். செடிப்

பேன் கூட்டத்தின் பெரும்பான்மை ஜந்துக்களுக்கு இறகுகள் கிடையாது. ஆனால் மெதுவாய் ஊரும் சக்தியுடையது.

மொச்சைச் செடி சாதாரணமாய் இப்பேனினால் அதிகமாய்ப் பீடிக்கப்படும் செடிகளிலொன்று. ஆயிரக்கணக்கான பேன்கள் இளஞ்செடிகளையும், துளிர்களையும், பூக்களையும் முற்றிலும் மூடியிருப்பதை அடிக்கடி காணலாம். இப்பூச்சியினால் சாதாரணமாய் பீடிக்கப்படக்கூடிய செடிகளாவன :—

பருத்தி, புகையிலை, கத்தரி, முட்டைக்கோஸ், முள்ளங்கி, அகத்தி முதலானவை.

(ii) மாப்போன்ற பூச்சி.—செடிப்பேனைப்போல இவைகளும் செடியின் சாரத்தை உறிஞ்சும் பூச்சிகள். ஆனால் இவைகள் வடிவத்தில் வித்தியாசமானவை. இவைகள் மிருதுவான தேகத்தோடு கூடியதும் ஒருவித பட்டுபோன்ற தூளினால் மூடப்பட்டதுமாயிருக்கும். சில பிராணிகளில் இப்பட்டுடை மிகுதியாயும் இன்னம் சிலவற்றில் குறைவாயும் மற்றவைகளில் அந்த ஜந்துவின் உடம்பிலிருந்து கிளம்பும் அநேகமான சிற்சில முளைகளாய்க் காணப்படும்படியாயும் அப்பட்டுடையினால் மூடப்பட்டுள்ளது.

ஆனதுகொண்டு இப்பூச்சிக்கு மாப்பூச்சி என்று பெயர். இந்தப் பூச்சியின் ஒருமாதிரி, சாதாரணமாய் பூச்செடிகள், ரோஜா இன்னும் மற்ற தோட்டத்தின் செடிகளிலும் வெள்ளை வெள்ளையாய் புலப்படும். அநேக ரகங்கள் நிறைந்துள்ள இப்பூச்சிகள் பருத்தி, கத்தரி, மா, கரும்பு, அன்னாசி, தக்காளி முதலியவற்றில் அதிகமாய்க் காணலாம்

(iii) செதில் பூச்சி.—பழக்க வழக்கங்களில் இப்பூச்சிகள் மேற்கூறிய இரண்டு பூச்சியினங்களைப்போல் உறிஞ்சுகிறவைகளேயாயினும் பார்வையில் அவைகள் ஜீவனில்லாதவைபோலத் தோன்றும். இப்பூச்சிகள் தங்கள் பிராயத்தில் செடிகளில் ஒட்டப்பட்டிருக்கின்றன. அவைகளில் பெரும்பான்மை சிலாம்புபோலக் காணப்பட்டு செடியின்மேல் மூடப்பட்டிருக்கும். அவைகள் இளந்துளிர்களையும், மாக்கிளைகளையும், நடுமரத்தையும் நாசம்பண்ணும். இவ்விதப் பூச்சியினால், பழவிருக்ஷங்களும், காப்பி, தேயிலைபோன்ற பயிர்களும் மிகுதியாய் சேதமடைவதுண்டு. இப்பூச்சியினத்தில் அதிகமாய் அறியப்பட்டவை காப்பிச்செடியில் விழும் தவிட்டுநிறமுள்ள பூச்சியும், பச்சை வர்ணமுள்ள பூச்சிகளுமே. இன்னம் மற்றவை கொய்யா, வேம்பு, கருவேல், மா, மற்றும் பல சாதாரண மரங்களிலும் காணப்படும். இந்தப் பூச்சிகளெல்லாம் ஏராளமாயும் அதிசீக்கிரமாயும் பெருகக்கூடிய சக்தியுடையது. ஆனதுபற்றி அவைகளை முதலிலேயே, பெருகவிடாமல் தடுக்கவேண்டும். இல்லாவிடில் அவைகள்

ஏராளமாய் நஷ்டத்தை விளைவிக்கக்கூடியன. அந்த நஷ்டத்தைத் தடுப்பதற்கு பின்வரும் எளிதில் வீட்டில் செய்யக்கூடிய ஔஷத முறைகள் அதிக அநுகூலமானது:—

சீமை எண்ணை ஔஷதம்.—இதைச் செய்யும் முறை: 1 அல்லது $1\frac{1}{2}$ பவுன் சாதாரண மட்ட சவுக்காரத்தை $2\frac{1}{2}$ படி (பட்டணம் படி) தண்ணீரில் கரைத்து அடுப்பேற்றி, நன்றாய் கொதிவந்தவுடன் அடுப்பிலிருந்து எடுத்துவிட்டு கொஞ்சம் கொஞ்சமாய் 5 படி சீமை எண்ணையை அதில் விட்டுக்கொண்டே ஒரு குச்சியினால் முழுவதும் வெள்ளையாகும்வரையிலும் கலக்கவேண்டியது. இப்படிச் செய்த இந்த மருந்தை, உறுஞ்சும் பூச்சிகளை நாசம்பண்ண செடிகளில் பிரயோகிக்கும்போது, 150 படி தண்ணீர் கலக்கி உபயோகிக்கவேண்டியது. மருந்தை, கொஞ்சம் ஜலம் விட்டோ, அல்லது அதிகம் ஜலம் விட்டோ, சந்தர்ப்பத்திற்கு தகுந்தாற்போல் உபயோகிக்கலாம். உப்பு ஜலமாயிருந்தால் சவுக்காரம் எளிதில் கரையாது. அதிக சவுக்காரம் தேவையாயிருக்கும். இந்த மருந்து அசுவுணி, செடிப்பேன் முதலிய மிருதுவான தேகத்தோடுகூடிய பூச்சிகளை நாசம்பண்ண 150 அல்லது 175 படி தண்ணீரில் கலக்கி நல்ல பலன் உண்டாகும்படி உபயோகிக்கலாம். கெட்டியான தேகமுடைய பூச்சிகளுக்கும் இலைகளின் சிறு தத்துப்பூச்சிகளுக்கும் அதிக காரமாக இம்மருந்தை உபயோகிக்கவேண்டும். அதாவது 75 அல்லது 100 படி தண்ணீர் மாத்திரமே விட்டுக் கலக்கவேண்டியது. இம்மருந்து எலிப்புழுவுக்கும் கால்நடைகளின் சிரங்கு முதலான பூச்சி சம்பந்தமான வியாதிகளுக்கும் உபயோகிக்கலாம். (இன்னும் வரும்.)

LESSONS FOR FAMILY WORSHIP

வேத வாசிப்பு ஒழுங்கு

1918-ஆம் நவம்பர்மீ

1 வெ.	2கொரி.	1.	1—11	11 தி	2கொரி.	9.	1—15	21 வி.	செப்.	2.	1—15
2 ச.	„	1.	12—24	12 செ.	„	10	1—18	22 வெ.	„	3.	5—20
3 ஞா.	„	2.	1—17	13 பு.	„	11.	1—15	23 ச.	தீத்	1	1—17
4 தி.	„	3.	1—18	14 வி.	„	11.	16—33	24 ஞா	„	1.	18—30
5 செ.	„	4.	1—18	15 வெ.	„	12	1—16	25 தி.	„	2.	1—13
6 பு.	„	5.	1—10	16 ச.	„	13.	1—14	26 செ.	„	2.	14—30
7 வி.	„	5.	11—21	17 ஞா.	அப்.	1.	1—14	27 பு.	„	3.	1—12
8 வெ.	„	6.	1—18	18 தி.	„	2.	1—14	28 வி.	„	3.	13—21
9 ச.	„	7.	1—16	19 செ.	„	3	1—19	29 வெ.	„	4.	1—9
10 ஞா.	„	8.	1—15	20 பு.	செப்.	1.	1—18	30 ச.	„	4.	10—23

C. L. S. PRESS, MADRAS—1918